OS.No. 48/2012 and 156/2016

Dated : 04.01.2024

Time: 11.50 a.m to 12.20 p.m

P.W- 2 சாட்சி சுப்பையா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் சார்பாக குறுக்கு விசாரணை.

குறுக்கு விசாரணை

1) பட்டுதுரைக்கும் சிவசங்கராபுரத்திற்கும் 2 மைல் தூரம் இருக்கும் என்றால் தவறு. 2 கி.மீ தூரம் இருக்கும். பட்டுதுரை கிராம எல்லையில் எனக்கு விவசாய நிலம் இல்லை என்றால் அது தவறு. சர்வே எண். 256/3 நிலம் உள்ளது. நான் சொல்லும் நிலம் பட்டுதுரையில் இல்லை என்றால் அது சரியல்ல. என்னுடைய விலாசம் சம்மந்தமான ஆவணங்கள் எந்த ஊரில் உள்ளது என்றால் சிவசங்காரபுரம், பட்டுதுரை ஊராட்சி என்றுதான் உள்ளது. வாதி, பிரதிவாதிகளுக்கு நான் உறவினர் அல்லர். தினந்தோறும் அவர்கள் வீட்டில் என்ன நடக்கிறது என அவ்வப்போது எனக்கு தெரியும்.

2) தாவா சொத்து சம்மந்தமான மற்றொரு வழக்கு இந்நீதிமன்றத்தில் யாரால் தாக்கல் செய்யப்பட்டது என்பது எனக்கு தெரியாது. மேற்படி வழக்குகளில் கண்டுள்ள சொத்துக்களின் சர்வே எண், பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. விஸ்தீரணம் 3 ஏக்கர் தெரியும். அதில் உள்ள வீட்டு எண், மிண்இணைப்பு எண் எனக்கு தெரியாது. அதற்கான ரசீதுகள் 1ம் பிரதிவாதி பெயரில் தான் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி தாவா சொத்து சம்மந்தமான வருவாய் ஆவணங்கள் அணைத்தும் 1ம் பிரதிவாதி பெயரில் தான் உள்ளது என்றால் அது தவறு. முத்துசாமி, அலமேலு பெயரில் உள்ளது. ஆனால் வருவாய் ஆவணங்களை நான் நேரடியாக பார்த்ததில்லை.

3) மேற்படி வருவாய் ஆவணங்கள் 1ம் பிரதிவாதி பெயரில் மட்டும் தான் இருப்பது எனக்கு தெரியும் என்றும் ஆனால் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்மந்தமான ஆவணங்களில் நான் எதிலும் கையெழுத்து செய்யவில்லை என்றால் ஒரு ஆவணத்தில் கையெழுத்திட்டுள்ளேன். மற்ற ஆவணங்களை நான் பார்க்கவில்லை. தாவா சொத்தின் ஒரு பகுதி ஆரோக்கியத்தின் பெயரிலும், மற்றொரு பகுதி அலமேலு, முத்துசாமி பெயரிலும் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கிரய பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து செய்யவில்லை. ஆனால் கிரய ஒப்பந்தத்தில் கையெழுத்து செய்தேன்.

அது 05.06.1997 ஏற்படுத்தப்பட்டது. 11.02.1998 ல் கிரயம் ஏற்படுத்தப்பட்டது. அதில் நான் சாட்சி கையெழுத்திடவில்லை. கிரய தேதியில் ஆரோக்கியம் என்னை அழைத்தார் நான் செல்லவில்லை. அவர் என்னுடைய நிலத்தில் சுமார் 1972 ல் இருந்து வேலை செய்தார்.

4) எனக்கும் அவருக்கும் சம்பளம் சம்மந்தமாக மனஸ்தாபம் ஏற்பட்டது என்றால் இல்லை. அதனால் தான் நான் கிரயத்திற்கு போகவில்லை. அந்த முன்விரோதத்தின் காரணமாக தான் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது தவறு. மேற்படி எவ்வளவு பூர்வீக சொத்துக்கள் இருந்தது அதில் என்ன வருமானம் வந்தது என்பது எனக்கு தெரியாது. குள்ளம்மாள் , பழனியம்மாள் ஆகியோரிடம் இருந்து தான் ஆரோக்கியம் கிரயம் பெற்றார். அப்போது இருந்தே அந்த நிலத்தை ஆரோக்கியம் தான் குத்தகைக்கு ஓட்டி வந்தார் என்றால் எல்லோரும் ஒன்றாக ஏக குடும்பமாகதான் ஓட்டி வந்தார்கள். நான் சொல்வது போல் ஒன்றாக குடும்பம் இல்லை தனித்தனியாகதான் இருந்தார்கள் என்றால் அது தவறு. ஆரோக்கியம் சொத்தை குத்தகைக்கு ஓட்டி வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5) தாவா சொத்திற்கு மேற்கே குப்பன் நிலம் உள்ளது. அதையும் 1ம் பிரதிவாதி குத்தகைக்கு ஓட்டி வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சிறுவாச்சூர் சேர்ந்த பெரியண்ணன் என்பவரை தெரியும். அவரிடம் 1ம் பிரதிவாதி கடன் வாங்கியது எனக்கு தெரியும் என்றால் தெரியாது. மேற்படி நபரிடம் ரூ.50,000/- கடன் வாங்கிதான் பிரதிவாதி கிரய தொகை கொடுத்தார் என்றும் அந்த விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் அது பற்றி தெரியாது. நான் சொல்வது போன்று குடும்ப சொத்தின் வருமானத்தை கொண்டு 1ம் பிரதிவாதி கிரயம் வாங்கவில்லை என்றும் அவருடைய தனிப்பட்ட வருமானத்தை, கடனை கொண்டு தான் கிரயம் வாங்கினார் என்றும் எனவே அது அவரது தனிப்பட்ட சொத்து என்றால் அது தவறு. குடும்ப வருமானத்தை கொண்டு தான் வாங்கப்பட்டது.

6) மேற்படி 1ம் பிரதிவாதி மட்டும் தான் வீடுகளை கட்டினார் என்றால் அது தவறு. அணைவரும் சேர்ந்துதான் கட்டினார்கள். அணைத்தும் ஆரோக்கியத்தின் சுய சம்பாத்தியம் வைத்து கட்டப்பட்டது என்றால் அது தவறு. மேறப்டி பஞ்சாயத்து எப்போது நடைபெற்றது என்ற தேதி விவரம் தெரியாது, ஆனால் பஞ்சாயத்து நடைபெற்றது. என் முன்பாக பஞ்சாயத்து நடைபெறவில்லை பிரதிவாதிகள் பாகம் எதுவும் கேட்கவில்லை என்றால் அது தவறு. அலமேலு உயிருடன் இருந்த போது குடும்ப பஞ்சாயத்திற்கு சென்றேன். மேற்படி 1ம் பிரதிவாதியிடம் இருந்து அழகுவேலும் தனக்கு பெற்றோர் சொத்தில் பங்கு வேண்டாம் என கூறி ரூ.20,000/-

பெற்றுக்கொண்டார் என்றால் அது தவறு.  அதேபோல் 2 ம் வாதியும் 3ம் பிரதிவாதியும் தலா ரூ.10,000/- தங்கள் பங்காக பெற்றுக்கொண்டார்கள் என்றால் அது தவறு.

7) மேலும் அதன் பிறகு அலமேலுவும், முத்துசாமியும் 05.01.1994 ல் மேற்படி விவரங்களை சொல்லி ஒரு உயில் எழுதிவைத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரிந்தவரை பஞ்சாயத்து அதுபோல் எதுவும் சொல்லவில்லை. உயிலைபற்றியும் சொல்லவில்லை.  மேற்படி விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றும் வாதிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது தவறு. மேற்படி உயில் அமலுக்கு வந்து நாளது தேதிவரை 1ம் பிரதிவாதிதான் தாவா சொத்தில் அனுபவித்து வருகிறார் என்றும் மேலும் அந்த சொத்து அவருக்கு கிரய பத்திரம் மற்றும் அனுபவம் மூலம் பாத்தியப்பட்டுவிட்டது எனவே வாதிக்கும் மற்றவர்களுக்கும் பாகம் இல்லை என்றால் அது தவறு.  வழக்கு நிலுவையில் இருக்கும் போது அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி மாதேஷ்வரியும் மற்றவர்களும் 1ம் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து மளிகை கடையை கைப்பற்றிக்கொண்டோம் என்றால் அது பொய்.  என்னுடைய சாட்சியம் நிராகரிப்படவேண்டும் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/-K.Ananthan**
**Accidents Claim Tribunal**
**Attur.**